## அம்மையகரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு.வ.சிவஞானம்..

ந.க.எண்: ஊ.நி–1 / 02 /2024 நாள்:26.02.2024

பொருள் மனைப்பிரிவு வரன்முறை செய்தல் – சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் –அம்மையகரம் ஊராட்சி – சர்வே எண். 2/5Bல் 9916 சதுர மீட்டர் (2.45 ஏக்கர்) பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு வரன் முறை செய்து உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.WLTFLY8F16300/2023/2023/TCP நாள்: 20.12.2023.
2. அம்மையகரம் ஊராட்சி தீர்மான எண். 72 , நாள்26.02.2024.

•••••••

**உத்தரவு**

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்மையகரம் ஊராட்சி சர்வே எண்.2/5Bல் 9916 சதுர மீட்டர் (2.45 ஏக்கர்) பரப்பளவில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைபிரிவு மனைகளை வரன் முறை செய்யும் பொருட்டு பார்வை–1ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.WLTFLY8F16300/2023/2023/TCP நாள்: 20.12.2023ன் படி கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டதை தொடர்ந்து கூராய்வு கட்டணமாக மனை ஒன்றிற்கு ரூ.1000 வீதம் ரூ.40000/– நாள் 03.02.2024 அன்று சம்மந்தப்பட்ட ஊராட்சி பொது நிதியிலும் (SNA), வரன்முறைபடுத்தும் கட்டணமாக ரூ.24256, நாள்.02.02.2024 அன்று சம்மந்தப்பட்ட அரசு கணக்கிலும் செலுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை–2ல் காணும் அம்மையகரம் ஊராட்சி மன்றத் தீர்மானத்தை தொடர்ந்து மேற்படி மனைப் பிரிவு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

............................................ நிபந்தனைகள் ............................................

- நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்: 1555/2019/விம நாள்:15.10.2018 உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி அனுமதி வழங்கப்படுகிறது.
- ஊராட்சிக்கு சொந்தமான நிலத்திலும், தெருவிலும், சாலைகளிலும், அரசுக்கு சொந்தமான இடத்திலும், சாலைகளிலும், பொது இடங்களிலும் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது, வீட்டு வாசற்படிகள் முதலியவைகள் விண்ணப்பதாரின் சொந்த இடத்தில் தான் இருக்க வேண்டும், வெளிப்பக்கம் திறக்கும் படியாக இருக்கக்கூடாது.
- கட்டிடம் கட்டுமிடத்தில் உரிமை சம்பந்தமான வில்லங்கங்களுக்கு ஊராட்சி பொறுப்பல்ல.
- கழிப்பறை , சாக்கடை, தொட்டி முதலியவை சுகாதார முறைப்படி எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான வகையில் அமைக்கப்பட வேண்டும். வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தெருசாலையை பாதிக்காமல் ஊராட்சி வடிகாலில் சேரும் வகையில் நிர்மானிக்கப்பட வேண்டும். வீட்டின் கூரைகள் தெருப்பக்கம் வெளியே நீட்டப்பட்டிருக்கக்கூடாது.
- கட்டிடம் கட்டி முடிக்கப்படுவதுடன் அதில் குடியேறும் முன் அதன் விபரத்தை தனி அலுவலர்/ஊராட்சித் தலைவர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

R. Srinivas
K. [illegible]
M. Elango

* மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
* உரிம நிபந்தனைகளுக்கும் உரிமம் பெற்ற வரை படத்திற்கும் மாறகச் செய்வதாலும் ஊராட்சி கட்டிட விதிகளுக்கும் அல்லது வேறெந்த சட்ட / திட்டங்களுக்கும் மாறான வழியில் உரிமம் பெற்றிருந்தாலும் இந்த உரிமை தள்ளுபடி செய்யப்பட்தாக கருதப்படும்.
* வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒரு மரம் வளர்க்க வேண்டும்.
* நவீன கழிப்டம் அமைக்கப்பட வேண்டும்.

ப. சிவஞானம் 26/2/24
ஊராட்சி மன்ற தலைவர்
அம்மையகரம்.
தலைவர்
அம்மையகரம் ஊராட்சி.

பெறுதல் :

திரு. R.சீனிவாசன், திரு. K.கௌதம், மற்றும் திரு. M.இளங்கோ
கனியாமூர்

நகல் : இருப்பு கோப்புக்கு

நகல் :

1. உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சின்னசேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

26.2/24
ஊராட்சி செயலாளர்
அம்மையகரம் ஊராட்சி.

R. Srinivasa
K. Gautham
M. Elango